**MINISTRY OF EDUCATION**

**கல்வி அமைச்சு**

**G.C.E. ORDINARY LEVEL - Model Paper**

**க.பொ.த சாதாரண தரம் - மாதிரி வினாத்தாள்**

**TAMIL LANGUAGE**

**தமிழ்மொழியும் இலக்கியமும்**

# MARKING SCHEME - I, II, III

# புள்ளித்திட்டம் - I, II, III



அனுசரணை :

# க.பொ.த (சா/த) மாதிரிப் பரீட்சை

## தரம் - 11 தமிழ்மொழியும் இலக்கியமும்

## புள்ளித் திட்டம்

### பகுதி I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 11 | 1 | 21 | 2 | 31 | 3 |
| 2 | 3 | 12 | 1 | 22 | 1 | 32 | 4 |
| 3 | 4 | 13 | 2 | 23 | 1 | 33 | 2 |
| 4 | 2 | 14 | 4 | 24 | 2 | 34 | 4 |
| 5 | 4 | 15 | 3 | 25 | 4 | 35 | 2 |
| 6 | 3 | 16 | 4 | 26 | 1 | 36 | 3 |
| 7 | 3 | 17 | 4 | 27 | 4 | 37 | 1 |
| 8 | 4 | 18 | 1 | 28 | 2 | 38 | 1 |
| 9 | 1 | 19 | 4 | 29 | 2 | 39 | 1 |
| 10 | 2 | 20 | 4 | 30 | 3 | 40 | 3 |

### பகுதி – II

01) (i) மதி இழந்து தன் வாய் இழந்து அருந்தவன் மறைந்தான்

(ii) அ) வடக்குப் பிரதேசம்

ஆ) சமையலறை

(iii) எழுவாய்- திசைகள்

பயனிலை- துலக்கமாயில்லை

(iv) சக்திக்கு மீறிப்போதல்

(v) கல்கியால் பொன்னியின் செல்வன் என்னும் நாவல் எழுதப்பட்டது.

(vi) இறை பெயர் - இறைவன்/ தலைவன்
வினை - இறைத்தல்

(vii) வாழையடி வாழையாக- பரம்பரை பரம்பரையாக --அக்குடும்பம் வாழையடி வாழையாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வந்தது.

(viii) இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர்களுக்கு உயர் பதவிகள் வழங்கிக் கௌரவிக்கப் படுகின்றன.

(ix) அ) சூட்டுக்களம்
ஆ) கொழுந்து நிறுக்கும் இடம்

(x) அ) வாட்படை
ஆ) மேற்றிசை

**(20 புள்ளிகள்)**

02) அ) பொருளமைவும் அளவும் - 12 புள்ளிகள்

ஆ) கருத்து வெளிப்பாடும் மொழிச்செம்மையும் - 06 புள்ளிகள்

இ) எழுத்து நுட்பங்கள் - 05 புள்ளிகள்

ஈ) தலையங்கம் - 02 புள்ளிகள்

மொத்தம் - 25 புள்ளிகள்

03) ✶ ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே குடும்பம்.

✶ குடும்ப உறவு நிலையும் அவரவர்க்கான கடமைகளும் பொறுப்புக்களும்

✶ குடும்பத்திலிருந்து சமூகம் உருவாதல்

✶ தனி மனிதனுக்கு வகுக்கப்பட்ட நெறிகள் பண்பாடாக நிலை பெற்றமை

**(என்னும் கருத்துக்களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்)**

**(10 புள்ளிகள்)**

04) (i) எபிரேய மொழி ,ஆதி கிரேக்க மொழி,இலத்தீன் மொழி, வடமொழி

(ii) இன்றும் பேச்சு வழக்கில் உள்ளமை

(iii) சமஸ்கிருதம், பார்ஸி, அரபி , தமிழ்

(iv) தோன்றிய காலம் முதல் இன்று வரை பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் வழங்கப்பட்டு வருவது

(v) எழுத்தின்றிப் பேச மட்டும் முடிந்த மொழிகள், உரோமன் எழுத்துக்களில் எழுதப்பட்டுப் பேசும் மொழிகள், தனித்துவமான எழுத்துக்கள் கொண்டு பேசப்படும் மொழிகள **(10 புள்ளிகள்)**

05) அமைப்பு - 04 புள்ளிகள்

உள்ளடக்கம் - 08 புள்ளிகள்

மொழிநடை - 03 புள்ளிகள்

மொத்தம் - 15 புள்ளிகள்

| | கடிதம் | பத்திரிகைச் செய்தி |
|---|---|---|
| அமைப்பு | முகவரி | கவர்ச்சியான தலைப்பு |
| | உள்முகவரி | பந்தியமைப்பு |
| | விளிப்பு | விடயத்தொடர்ச்சி |
| | தலைப்பு | முடிப்பு |
| | முடிப்பு | |
| | ஒப்பம் | |
| உள்ளடக்கம் | குறைபாடுகள் | |
| | வடிகாலமைப்பக்களின் சீரற்ற தன்மை | பிரதேசத்தின் பெயர் |
| | நீர் தேங்கி நிற்றல் | பங்குபற்றிய கழகங்களின் விபரம் |
| | துர்நாற்றம் | காலமும் நேரமும் |
| | நுளம்புப் பெருக்கம் | பிரதம, சிறப்பு விருந்தினர்கள் |
| | தொற்றுநோய் அபாயம் | தலைமை |
| | தீர்வுகள் | நிகழ்வுகள் |
| | வடிகாலமைப்புக்களைச் சீர்செய்தல் | அனுசரணை வழங்கியோர் |
| | | நிறைவு |
| மொழிநடை | பொருத்தமான மொழிநடை நிறுத்தற் குறிகளின் பிரயோகம்<br>வழுக்களின்மை<br>சுட்டிப்பாகக் கூறுதல் | |

## பகுதி - III

01) (i) அ) சோழமன்னனான இராசகுலதிலகன்
ஆ) வீரச்சிறப்பு

(ii) அ) ஒரு பார்வையில் எண்ணும் கலை
ஆ) இருதுபர்ணன்

(iii) அ) திரிகூடராசப்ப கவிராயர்
ஆ) உடலழியாது நிலை பெறச் செய்கின்ற மூலிகைச் செடி

(iv) அ) தருமபுத்திரர்
ஆ) அறம்

(v) அ) ரெறன்ஸ் எனும் இலத்தீன் புலவர்
ஆ) மக்கள் நலக் கொள்கை

(vi) அ) துரியோதனன்
ஆ) மகாபாரதம்

(vii) அ) எழுத்தறிவின்மையின் அவலம்
ஆ) உயிர்ப்பல்லாத சிரிப்பு

(viii) அ) பாரி மகளிர் (அங்கவை, சங்கவை)
ஆ) தந்தையையும் நாட்டையும் இழந்த நிலையில்

(ix) அ) இராமன் , இலக்குவன் , பரதன் , சத்துருக்கன், குகன்
ஆ) அயோத்தி

(x) அ) திருக்குறள்
ஆ) நரகம்

**(20 புள்ளிகள்)**

02) (i) அ) அப்பனின் சிதைமேல் ஏறிநின்று எவரோ வாழ்வதற்காகத் தன் உயிரை வருத்தி உழைக்கின்றான்.
ஆ) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் அவலத்தை

(ii) அ) உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்
ஆ) கணவன்

(iii) அ) பிரம்மன், திருமால்
ஆ) தசரதனின் மூத்த மனைவி
இராமனைப் பெற்ற தாய்
பரதனால் செல்வத்தைத் துறந்த பெரியவள்

(iv) அ) ✶ நோய் வந்தால் படுப்பதில்லை, ஆஸ்பத்திரிக்கு அலைவதுமில்லை.
✶ யாருக்கு நோய் வந்தாலும் கூப்பிடாத வைத்தியராய் ஓடிச்சென்று வைத்தியம் பார்த்தல்
✶ கைராசிக்காரி
ஆ) கையால் செய்யுங் காரியங்கள் நன்மை தருதல்

(v) அ) பார்ப்பனர்
சமணர்
புத்தர்
ஐரோப்பியக் கிறிஸ்தவர்

ஆ)

✶ தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அடைந்ததில்லை. . ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளமை

✶ பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், புத்தரும் ஐரோப்பியக் கிறிஸ்தவரும் மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றமை

**(20 புள்ளிகள்)**

03) அ) ஏர்ப்பாடலில் உழவனின் பொதுநலம்

✶ பட்டி பெருகுதல் பாற்பானை பொங்குதல், செல்வம் பெருகுதல், வேளாண்மை விளைதல் என்பன நடைபெற வேண்டும் என உழவன் வேண்டுவது உடனடியாக அவனுக்குப் பலனைக் கொடுத்தாலும் நீண்ட கால இடைவெளியில் பொது மக்கள் அனைவருக்கும் பலனைக் கொடுப்பதாக அமைகின்றது. ஆகவே இவ்வேண்டுதல் மூலம் உழவனின் பொதுநல மனப்பாங்கு வெளிப்படுதல்

✶ நாடு தழைக்க வேண்டும் தம்பிரானே

நல்ல மழை பெய்ய வேண்டும் தம்பிரானே

ஏர் தழைக்க வேண்டும் தம்பிரானே

எல்லோரும் வாழ வேண்டும் தம்பிரானே

என்று இறைவனிடம் இரந்து வேண்டும் இந்த ஏழைத் தொழிலாளரிடம் சுயநலமில்லாத பிறர் நலமே மேலோங்கிக் காணப்படுதல்

✶ உழவர்கள் மாத்திரமன்றி உழவுத் தொழிலை நம்பியிருக்கும் முழு உலகமுமே சிறப்பாக வாழ வேண்டும் என்ற உழவனின் பொது நோக்கு

✶ எதிர்காலத்தில் எல்லோரும் நன்றாக வாழ வேண்டுமாயின் நிகழ்காலத்திலேயே அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உழவனின் தொலைநோக்குச் சிந்தனை பொதுநலத்தை எடுத்துக் காட்டுகிறது.

**(8 புள்ளிகள்)**

ஆ) மீனவர் பாடலில் கடல் மீதான நம்பிக்கை

✶ தமது வாழ்வாதாரம் கடல் என நம்புதல்

✶ மண்ண நம்பி மரமிருக்க........ பழத்த நம்பி நானிருக்கேன் என்று பல தொடர் நிகழ்வுகளினூடாக எடுத்துக் காட்டப்படுகிறது. இங்கு மரம், கிளை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம் என்பவற்றுக்கெல்லாம் அடிப்படை மண் என்பது போல மீனவர் வாழ்வின் சகல அம்சங்களுக்கும் அடிப்படையாக விளங்குவது கடல் என்று கடல் மூீதான நம்பிக்கை எடுத்துக் காட்டப்படுகிறது.

✶ உன்ன நம்பி நானிருக்கேன் என்ற அடி மீனவன் கடல் மீது கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்தி நிற்கின்றது.

**(7 புள்ளிகள்)**

**அல்லது**

அ) சிறு குதிரை பூட்டப்பட்ட வண்டியில் ஏறிச் செலுத்தி இன்பம் பெறாவிடினும் கையில் இழுத்து இன்பமடையும் சிறுகுழந்தைகள் போல தலைவி தலைவனுடன் கூடி இன்பம் பெறாவிட்டாலும் தன் உள்ளத்தே நட்பை பெருகச் செய்து இன்புற்றமை

தலைவியின் கைகளில் அணிந்துள்ள வளையல்கள் இறுக்கமாகக் காணப்படுவதால் தலைவி இன்பமாக இருக்கிறாள் என்பது உணர்த்தப் படுகிறது

**(5புள்ளிகள்)**

ஆ) இளமையின் இனிமை

வண்டல் மண்ணால் செய்யப்பட்ட பாவைக்குப் பூச்சூடி மகிழும் கள்ளங்கபடமற்ற பெண்களோடு கைகோர்த்து, ஒளிவு மறைவின்றி அவர்கள் தழுவிய வழி தழுவியும் அசைந்த வழி அசைந்தும் விளையாடிய கபடமற்ற இளமைந்தருடன் சேர்ந்து உயர்ந்த கிளைகளையுடைய மருத மரத்தின் கிளைகளிலே ஏறி கரையிலே நிற்போர் அஞ்சும் படியாகவும் நீர்த்திவலைகள் 'துடும்' என ஒலியெழுப்பி மேலே எழும்படியாகவும் நீருக்குள் பாய்ந்து குதித்து, மூழ்கி மணலை எடுத்தக் காட்டிய இளமைப் பருவம் என்று இளமையின் இனிமை எடுத்துக் காட்டப்படுகிறது.

**(5 புள்ளிகள்)**

முதுமையின் கொடுமை

பூண் பூட்டப்பெற்ற ஊன்றுகோலை ஊன்றிக் கொண்டு தளர்ந்த நடையுடனும் தொடர்ச்சியான இருமலுடனும் இடையிடையே சில வார்த்தைகள் பேசிக்கொண்டு மிகுந்த துன்பத்துடன் ஒழிந்து கொண்டு செல்கின்றது என முதுமையின் கொடுமை எடுத்துக் காட்டப்படுகிறது.

**(5 புள்ளிகள்)**

04) அ) நாவலரின் நேர்மை

- நாவலரும் விசுவநாதபிள்ளையும் இளமை தொடக்கம் பத்திரிகை வாயிலாக வாதம் செய்து வந்தவர்கள். விசுவநாதபிள்ளை நாவலரை எதிர்த்து பல கண்டனப் பத்திரிகைகள் பதித்து வெளியிட்டவர். ஆயினும் சிதம்பரத்திலே நாவலர் அவர்களோடு வாதஞ் செய்து நாவலரின் கொள்கைகளுக்கு இணங்கி அவர்களிடம் மதிப்பு வைத்து அன்று தொடக்கம் நாவலரைக் குருவாக ஏற்றுக் கொண்டவர் என்பதனூடாக நாவலரின் நேர்மை எடுத்துக் காட்டப்படுகின்றது.
- நல்லூர் கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது. நல்லூர் கோயிலாருக்கு பிறிற்றோவும் பிராமணர்களுக்கு நாவலரும் ஆதரவு வழங்கிக் கொண்டிருந்தனர். நாவலருக்கு யாழ்ப்பாணத்தில் இருந்த செல்வாக்கை அறிந்த பிறிற்றோ நாவலர் தமக்குச் சார்பாக நடந்தால் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்தி வைப்பதாக அந்தரங்க நண்பர்கள், கடிதங்கள், தந்திகள் மூலமாக தெரிவித்திருந்தார். இந்த நேர்மையற்ற செயல் நாவலரவர்கள் இருதயத்தில் பெரு நெருப்பைக் கொளுத்தி விட்டது என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுவதன்மூலம் நாவலரின் நேர்மை எடுத்துக் காட்டப்படுகிறது.

**(8 புள்ளிகள்)**

ஆ) பிறிற்றோவின் நேர்மையீனம்

- நல்லூர் கோயிலாருக்கும் பிராமணர்களுக்கும் பாரிய வழக்கு நடந்தது. நல்லூர் கோயிலாருக்கு பிறிற்றோவும் பிராமணர்களுக்கு நாவலரும் ஆதரவு வழங்கிக் கொண்டிருந்தனர். நாவலருக்கு யாழ்ப்பாணத்தில் இருந்த செல்வாக்கை அறிந்த பிறிற்றோ நாவலர் தமக்குச் சார்பாக நடந்தால் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்தி வைப்பதாக அந்தரங்க நண்பர்கள், கடிதங்கள், தந்திகள் மூலமாக தெரிவித்திருந்தார். இதுவே பிறிற்றோவின் நேர்மையற்ற செயல் எடுத்துக் காட்டப்படுகிறது.

**(7 புள்ளிகள்)**

**அல்லது**

சினிமா மொழி

- ✶ சினிமாவின் சிறப்பம்சம்
- ✶ சினிமாவுக்குத் தனித்தவத்தைக் கொடுப்பது சினிமா மொழியாகும்.
- ✶ சினிமா மொழியில் 3 அம்சங்கள் உள்ளன.
    1) காட்சிப் படிமம்
    2) ஒலி
    3) படத்தொகுப்பு
- ✶ சினிமா மொழியின் தன்மையையும் தனித்துவத்தையும் உணர்ந்து, அழுத்தமாகக் கையாண்டு நல்ல சினிமாவை உருவாக்க முடியும்.
- ✶ சினிமா மொழிக்கு இலக்கணம், மரபு என்பன உண்டு.
- ✶ குறியீடுகள் மூலம் மையக் கருத்தை வலியுறுத்துவதனூடாக சினிமா மொழியை வளமடையச் செய்யலாம்.
- ✶ சினிமா மொழி பரிச்சயமில்லாவிட்டால் சினிமாவை அனுபவிக்க முடியாது.
- ✶ சினிமா மொழி மனித குலத்திற்குப் பொதுவானது.
- ✶ சினிமா மொழியே சினிமாவின் சக்தி ஆகும்.

**(7 புள்ளிகள்)**

ஆ) சினிமாவின் சீரழிவிற்கான காரணங்கள்

- ✶ சினிமா நாடகத்திற்கு அடிமைப்பட்டிருத்தல்.
- ✶ சினிமா இயக்கனர்கள், நடிகர்கள், வசன கருத்தாக்கள், பாடலாசிரியர்கள் யாவரும் நாடகத் துறையிலிருந்து வந்தமை.
- ✶ சினிமாவில் நாடகத்தனம் மிகுந்திருத்தல்
    1) சினிமாக் கதாப்பாத்திரங்கள் சதுரமான திரையின் விளிம்பிலிருந்து வந்து வசனத்தைப் பேசி விட்டுப் பக்கவாட்டில் சென்று மறைதல்
    2) குரலை ஏற்றி இறக்கிப் பேசாமல் கத்திப் பேசுதல்
    3) பாத்திரங்கள் கமெராவைப் பார்த்துப் பேசிக்கொண்டேயிருத்தல்
    4) படம் முழுவதும் பின்னணி இசை ஒலித்தல்
- ✶ சினிமாமொழி பற்றிய பரிச்சயமின்மை
- ✶ காட்சிப் படிமம் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தை மூலம் கூறுதல்
- ✶ பேச்சுக்கும் பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது.

**(8 புள்ளிகள்)**

05) அ) அடக்கமுடையவரை அறிவில்லாதவர் என்று எண்ணக்கூடாது.

அடக்கமுடையவரை வெல்ல நினைக்கக்கூடாது.

ஓடுமீன் ஓடி உறுமீன் வரும் வரை காத்திருக்கும் கொக்கு போல

அடக்கமுடையவர் தக்க சந்தர்ப்பம் வரும் வரை காத்திருப்பர்.

**(05 புள்ளிகள்)**

ஆ) யானை பல காலம் பழகியிருந்தாலும் தனக்கு உணவு கொடுத்துப் பராமரிக்கும் பாகனையே கொல்லுமாதலால் யானை போன்றவருடைய நட்பை விலக்கிக்கொள்ள வேண்டும்.

நாய் தன்னை வளர்த்தவர் தன் மீது சினந்து எறிந்த ஆயுதம் தம் உடம்பில்

தைத்து இருந்தாலும் அன்பின் அடையாளமாக அவனைப் பார்த்து வாலை ஆட்டும்.

**(05 புள்ளிகள்)**

06) அ)

- முல்லைநிலக் காட்சி

  மரங்கள்- மாமரம் பூமரம்

  விலங்குகள்- குரங்கு வண்டு குயில் கிளி மயில்
- மருதநிலக் காட்சி

  வயற்காட்சி வருணனை
- அருவி குளம் பற்றிய வருணனை

**( 05 புள்ளிகள்)**

ஆ)

- மகிழ்ச்சி - குரங்கு மயில் கிளி குயில் வண்டு என்பவற்றின் செயல்கள்
- தாய்ப்பாசம் - கன்றினது உடல் நக்கிக் கனைக்கின்ற பசுக்கள்

  குஞ்சிருக்கும் கூட்டினுக்கு இரையெடுத்துச் சென்று குனிந்தலகால் இரையூட்டும் குருவி
- விருந்தோம்பல் - கரைந்தழைத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்

  . பசிக்கூட்டம் விரட்டி வரும் பண்புமிகு ஈரம்
- வீரம் - பனிக்கூட்டம் விரட்டி வரும் பகலவனின் வீரம்

  ஓடுகின்ற நீரை யெதிர்த்தோடுகின்ற மீன்கள்
- சுறுசுறுப்பு அதிகாலை துயிலெழல்- அதிகாலை எழுந்து இரை தேட வரும் பறவை
- ஒழுங்கு – ஊருகின்ற சிற்றெறும்பின் ஒழுங்குமுறை வாழ்க்கை
- பணிவு – குலை வாழை தலை சாய்த்து குனிந்திருக்கும் அழகு

**(05 புள்ளிகள்)**

07)

அ) சீதக்காதியின் கொடைச் சிறப்பு

- ஒரு தட்டிலே பொன்னும் ஒரு தட்டிலே நெல்லும் சமப்படுத்தி விற்கின்ற பஞ்சகாலத்திலும் கொடை வழங்கியமை.
- யார் தடுத்த போதும் நிறுத்தி விடாமல் கொடை வழங்கியமை.
- இரப்பவர் கைநீட்ட முன்னரே அன்னம் கொடுப்பதற்குத் தயாராக இருந்தமை.

**(05 புள்ளிகள்)**

ஆ) காளமேகத்தின் கவிச்சிறப்பு

- நீக்க வேண்டிய பிழைகளை நீக்குதல்.
- கடல் போன்ற நல்ல நூல்களை அறிவுக்கு உணவாக உண்ணல் .
- பொதிகை மலையிலே தவழ்கின்ற தென்றலைத் துணையாகக் கொள்ளல்.
- வனப்பு மிக்க கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களுடைய மனமாகிய வானத்திலே ஏறிக்கொண்டு இடிபோல இடித்து, மின்னலைப் போல மின்னி மழை போன்று கவிமழை பொழிதல்.

**(05 புள்ளிகள்)**